IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.129/2020

DEPOSITION OF WITNESS P.W.12

| | | |
|---|---|---|
| NAME | : | GOPI |
| FATHER'S NAME | : | JAGANNATHAN |
| VILLAGE | : | HOSUSR |
| OCCUPATION | : | DOCTOR |
| AGE | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 7th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் கடந்த 26.08.2019ம் தேதியன்று அரசு மருத்துவமனை பேர்ணாம்பட்டு உதவி மருத்துவராக பணியில் இருந்த போது அன்று காலை சுமார் 08.43 மணியளவில் 35 வயது மதிக்கத்தக்க பூபதி த–பெ ரத்தினம் ஏரிகுத்தி கிராமம் பேர்ணாம்பட்டை சேர்ந்தவரை அவருடைய மனைவி ரேகா என்பவர் அழைத்து வந்ததார். 26.08.2019ம் தேதியன்று சுமார் காலை 08.00 மணியளவில் துளக்கன் குட்டை என்ற இடத்தில் சாலை போக்குவரத்து விபத்து ஏற்பட்டதாக அவரது மனைவி இருசக்கர வாகனம் மற்றும் பஸ் மோதியதாக கூறினார். நோயாளியை பரிசோதித்த போது சுய நினைவு இழந்து கட்டளைக்கு பதலளிக்காமல் காணப்பட்டார். சம்பவத்திற்கான நிகழ்வுகள் அனைத்து அவரது மனைவியிடம் பெறப்பட்டது. அவருடைய இதயம் சுவாசம் இயல்பாக செயல்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் மருத்துவ கண்டுபிடிப்புகள் அவருக்கு இரத்தபோக்கு மூக்கிலும், இடது பக்க காதிலும் இருந்தது. இடது பக்கம் தலை வலது பக்க முகம் பரவலான வீக்கம் காணப்பட்டது. ஆழமான வெட்டுகாயம் வலது பக்க முகத்தில் இருந்தது. பல சிராய்ப்பு காயங்கள் வலது கையில் இருந்தது. கண்கள் விழித்திரை சரியாக செயல்படவில்லை. நோயாளி சுயநினைவின்றி இருப்பதாலும் தலையில் ஏற்பட்ட பலத்த காயத்திற்காகவும், மேம்பட்ட அவசர சிகிச்சைக்காக உயர்நிலை மருத்துவமனைக்கு பரிந்துரைத்து அனுப்பி வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேடு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.(அசல் விபத்து பதிவேடு அரசுதரப்பு வழக்கறிஞர் அவரது கோப்பிலிருந்து இன்றைய தினம் தாக்கல் செய்தார் எதிரி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். ஒரு நபர் தாமாக இரு சக்கர வாகனத்தில் சென்று கீழே விழும்போது மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது.

விபத்து பதிவேட்டில் நான் ரேகா என்பவர் சொல்லிதான் விபத்து குறித்து தெரிய வந்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

Sd/-R.Saranya.,
Judicial Magistrate,
Gudiyatham.